Client information

Tamil

# உங்கள் அடைக்கல கோரிக்கை மற்றும் அனைத்து வேண்டுகோள்களும் மறுக்கப்பட்டபின் உதவி மற்றும் தங்குமிடம்

Home Office(உள்துறை அலுவலகம்)* உங்கள் அடைக்கல கோரிக்கை மீது எவ்வித முடிவும் எடுக்கவில்லை என்றாலோ அல்லது உங்கள் வேண்டுக்கோள்களில் ஏதேனும் நிலுவையில் இருந்தாலோ, NASS(தேசிய அடைக்கல உதவி சேவை)* இடமிருந்து உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும். உங்கள் அடைக்கல கோரிக்கை மற்றும் அனைத்து வேண்டுகோள்களும் மறுக்கப்பட்டால், உங்களுக்கு அளிக்கப்படும் உதவியில் மாற்றம் ஏற்படக்கூடும்.

## எனது அடைக்கல கோரிக்கை மற்றும் அனைத்து வேண்டுகோள்களும் மறுக்கப்பட்டுவிட்டனவா?

**உங்களுக்கு சரியாக தெரியவில்லை என்றாலோ, அல்லது உங்கள் நாட்டின் சூழ்நிலை மாறியிருந்தாலோ, இயன்றவரை விரைவாக நீங்கள் சட்ட ஆலோசனை பெற வேண்டும். உங்கள் வழக்கறிஞரின் அறிவுரையை கேட்கவும்** அல்லது நிகழ்வு பணியாளர் ஒருவரிடம் வழக்கறிஞர்களின் பட்டியலைக் கேட்டுப் பெறவும்.

## உங்கள் அடைக்கல கோரிக்கை மற்றும் அனைத்து வேண்டுகோள்களும் மறுக்கப்பட்டபின் உதவி

உங்கள் அடைக்கல கோரிக்கை மறுக்கப்பட்டபின் தங்குமிடம் மற்றும் உதவி பெறுவது மிகவும் கடினமாகும். இருப்பினும் சில விருப்பத்தேர்வுகள் உள்ளன:

1. **பிரிவு 95 உதவி -** உங்கள் அடைக்கல கோரிக்கையின்போது நீங்கள் பெற்ற உதவி

- 18 வயதிற்கு குறைவாக உங்களுக்கு குழந்தைகள் இருந்து, அவர்கள் உங்கள் S95 NASS* உதவி முடிவதற்குமுன் உங்களுடன் வாழ்ந்து வந்திருந்தால், உங்கள் குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை அது பொதுவாக தொடரும்.
- உங்களுக்கு குழந்தைகள் இல்லாவிட்டால், உங்கள் NASS S95* உதவியானது, இறுதியாக உங்களுக்கு அடைக்கலம் மறுக்கப்பட்ட 21 நாட்களில் நிறுத்தப்பட்டுவிடும். இது குறித்து ஒரு கடிதம் மூலம் NASS* உங்களுக்கு தெரிவிக்கும்.

2. **பிரிவு 4 உதவி -** அடிப்படை தங்குமிட வசதி மற்றும் உணவு அல்லது சீட்டுக்கள்.

- உங்கள் NASS S95* உதவி நிறுத்தப்பட்டபின் நீங்கள் குழந்தைகளைப் பெறுவீர்களானால், அல்லது உங்களால் யூகேயைவிட்டு வெளியேற முடியாவிட்டால் அல்லது உங்கள் நாட்டிற்கு உங்கள் விருப்பத்தின்பேரில் செல்வதற்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால் நீங்கள் பிரிவு 4 உதவியைப் பெறுவதற்கு தகுதி பெறுகிறீர்கள். **தயவுசெய்து விவரங்களுக்கு உதவிகள் பற்றிய Section 4*** மீதான **Refugee Action's* சிற்றேட்டைப் பார்க்கவும்.**

3. **உள்ளூர் அதிகாரிகளின் உதவி**

- நீங்கள் கடுமையான உடல்/மனப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்தால், அல்லது வயதானவராக/ உடல்நலக்குறைவு உள்ளவராக இருந்தால் Local Authority(உள்ளூர் அதிகாரிகள்)* உங்களுக்கு தங்குமிட வசதி மற்றும் உதவி வழங்கக்கூடும். அவர்கள் முதலில் உங்களை மதிப்பிட வேண்டும் - இது Community Care Assessment(சமுதாய பராமரிப்பு மதிப்பீடு)* என்று அழைக்கப்படுவதுடன் இதற்கு சில வாரங்கள் ஆகலாம்.
- உங்களுக்கு குழந்தைகள் இருந்து, S95 அல்லது S4 உதவி பெறுவதற்குஉங்களுக்கு தகுதி இல்லாவிட்டால், உள்ளூர் அதிகாரிகள் உங்கள் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கலாம், ஆனால், உங்கள் குடும்பத்தில் 18 வயதிற்கு அதிகமாக உள்ள எவருக்கும் உதவிட மறுக்கக்கூடும்.

**மேற்குறிப்பிட்ட வகைகள் எதுவும் உங்களுக்கு பொருந்தவில்லையெனில்,** நீங்கள் தங்குமிடம், உணவு அல்லது உடைகளை பெறுவதற்கு உதவக்கூடிய உள்ளூர் அமைப்புகள் சில இருக்கக்கூடும்.

**உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் தயவுசெய்து ஒரு நிகழ்வு பணியாளரை கேட்கவும்.**

* இச்சொற்கள் நிறுவனங்களின் ஆங்கிலப் பெயர்கள் அல்லது மொழிபெயர்க்க முடியாத பிறவகை சொற்களாகும். அவை எதைக் குறிக்கின்றன என்பதை விளக்கிக்கூறும்படி ஓர் ஆலோசனை பணியாளரைக் கேட்கவும்.